வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

| சைவ பரிபாலன சபை வெளியீடு | பிரதி விலை சதம் 20 |
|---|---|

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் வ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 400, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத் - அஅ] யாழ்ப்பாணம்: நள ஞூ கார்த்திகை மீ ச - ௳ வெள்ளிக்கிழமை (19 - 11 - 1976) [இல: நந.

# சைவத்திருப்பணிக்குத் தடை

# நெருக்கடி

## மதம்மொழிஎவ்விதமும்

பாதிக்கப்படமாட்டா என்ற போலிக் கூற்றுக்கு

## உகந்தை உதாரணம்

உகந்தையில் ஒரு முருகன்கோயில். அத்திருப்பணித்தொண்டாற்ற ஆர்வமுடன் செயலாற்றத் திருப்பணிச்சபை முன்வந்தது. ஆனால் அரசியல் உடனே குறுக்கிட்டுத் தடைஉத்தரவு பிறப்பிக்கச் செய்துவிட்டது.

ஈழத்திலே சாதி சமயம் மதம் ஆகியனவற்றில் எதுவித பேதமும் இல்லை என்று மார்புதட்டி ஆறுதல்மொழி கூறும் அன்பர்கள் கதிர்காமம், உகந்தை போன்ற இடங்களில் நிகழும் விபரீதங்களைச் சற்று நோக்குவார்களா.

கோயில் கட்டவேண்டாம் என்று குழப்பஞ் செய்பவர்கள் வாயில் வரும் வேதாந்தம் புரட்சி வேதாந்தமா அல்லது பொதுவுடைமையா?

கோயிற் குருக்கள் குடியிருக்கும் வீட்டில் மாகோவிற் பயங்கரமான கொள்ளை அடிக்கப்பட்டதென அறிகின்றோம். மதத்துக்கு இனிமேல் மதிப்பில்லையா!

## கட்டுரைப் போட்டி

யாழ். பெரியபுலம் தமிழ்ப் பாடசாலை இந்துமா மன்றம் நாவலர் நினைவு விழாச் சார்பான கட்டுரைப் போட்டியை 27-11-76 இல் நடத்துகின்றது. வெற்றி பெறுவோருக்கு பரிசளிப்பு 12-12-76 ஆறுமுக நாவலர் குருபூசையின்போது நடைபெறும்.

அஞ்ஞானத்தை நீக்கி

## ஞானத்தைத் தருவது தீட்சை

சமய தீட்சை பெற்றவரே சமயியாவர்

"தீட்சையென் பதன் பொருள் கெடுத்துக் கொடுப்பதாகும்: அஞ்ஞானத்தைக் கெடுத்து ஞானத்தைக் கைகொடுப்பதாகும். சமயதீட்சை பெற்றுக் கொண்டவர்கள் இன்று தொடக்கம் பஞ்சாட்சர செபம் புரியும் அதிகாரத்தைப் பெற்றுவிட்டீர்கள்: பஞ்சாட்சரம் சகல விக்கினங்களையும் நீக்கவல்லது. அதனை ஓதுகின்றவர்கள் நோய்நீக்கம் செல்வம், ஞானம், வீடு பேறு முதலிய செல்வங்களை எய்துவார்கள். நீங்கள் தினமும் சந்தியாவந்தனம் புரிந்து பஞ்சாட்சர செபம் செய்தல் வேண்டும். சிவபெருமானையும் அவர் அருளிச் செய்த வேத சிவாகமங்களையும் நிந்தித்தலாகாது: சிவனடியார்களையும் நிந்தித்தலாகாது. புலாலுணவைத் தவிர்த்தல் வேண்டும். உங்களுக்கு இன்று உதவப்பட்ட நித்திய கருமவிதி என்னும் நூல் வழி வல்லுனர்கள் உதவியின்படி சுருக்கமான முறையில் சந்தியாவந்தனத்தைப் புரியப் பழகிக் கொள்ளுதல் நலம்".

இவ்வாறு சைவ பரிபாலன சபையாதரவில் ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமையன்று சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்ந்த சமயதீட்சை வைபவத்தின்போது உபதேசம் செய்த தீஷாகுரு ஸ்ரீமத் கை. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் (சுரணயாயாதீனம்) தீட்சை முடிந்தபின் கூறினார்கள்.

18-11-76 இல் நிகழ்ந்த இவ் வைபவத்தில் 50-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும் பிறருக்கும் தீட்சை செய்து வைத்தார்கள்.

யாழ்ப்பாணம் மில்க்வைற் அதிபரால் தீட்சை பெற்றவர்களுக்கு நித்தியகருமவிதிப் பிரதிகள் வழங்கப்பெற்றன.

## சைவ பரிபாலன சபை
### யாழ்ப்பாணம்

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பண்ணிசை பயிலும் மன்றங்கள் மத்தியில் ஒரு பண்ணிசைப் போட்டியை சைவ பரிபாலன சபை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் போட்டி மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும்: (1) கீழ்ப் பிரிவு — 12 வயதுக் குட்பட்டவர்கள். (2) மத்திய பிரிவு 12 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். (3) 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இப் போட்டியிற் பங்குகொள்ள விரும்பும் மன்றங்கள் தங்கள் மட்டத்தில் ஆரம்பப் போட்டியை நடாத்தி ஒவ்வோர் பிரிவுக்கும் ஒரு போட்டியாளரைத் தெரிவு செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மன்றங்கள் தாங்கள் பயிற்சிகொடுத்த திருமுறைகளின் தலைப்புகளை 25-11-76க்கு முன்னர் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும.

**இப் போட்டி முடிவு திகதி 25—11—76 ஆகும்.**

**போட்டி 5-12-76 அன்று யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.**

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நாவலர் பெருமான் குருபூசை [12-12-76] த் தினத்தன்று பரிசில்கள் வழங்கப் பெறும்.

மேலும் விபரங்கள் பெற விரும்பின் பண்ணிசைப் போட்டிச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

## ஞானபீடம் அமர்ந்த 5-ஆம் ஆண்டு விழா

திருவாவடுதுறை ஆதீனம் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் "ஞானபீடம்" அமர்ந்த 5-வது ஆண்டு நான்விழா ஐப்பசித் திங்கள் 4-ம் நாள் காலை சிறப்பாக நடைபெற்றது.

காலையில் ஆதீன முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவ சமாதிகூடி அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கத் திருவுருக் கொண்டு இன்று அருள் பாலித்துவரும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலின் சந்நிதியின்முன் "ஆகமரத்னாகரம்" சிவஸ்ரீ எஸ். சுவாமிநாதசிவாசாரியார் அவர்கள் சிவாகம முறைப்படி ஹோமங்கள் நடத்தி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு கலசாபிஷேகங்கள் செய்துவைத்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயில், ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலக்ஷ்மி துர்க்காதேவி கோயில் கீழ்க்கோயில் மூன்றிலும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடத்தி வழிபாடுகள் செய்து கொண்டு சுபவேளையில் ஞானபீடத்தில் அமர்ந்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானின் பிரசாதம், மற்றும் ஆதீன அருளாட்சியிலுள்ள 27 சிவாலயங்களின் பிரசாதங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை பெருமக்கள், ஆதீன அலுவலர்கள் நமஸ்காரம் செய்து கொண்டு அருள்பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

சைவ-சித்தாந்த சாஸ்திரங்களின் தலைமணி நூலாகிய "சிவஞானபோதம்" என்ற நூலை அருளிச் செய்துள்ளவரும், சந்தானசாரியார் நால்வருள் முதல்வருமாகிய ஸ்ரீ மெய்

(வளர்ச்சி 3 பக்கம்)

## சபையை வளர்க்கச் சகலரும்
## சற்பணி புரிவோம்

[ இளைப்பாறிய ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை, ஏழாலை ]

சைவசமயத்தவரால் ஐந்தாங் குரவர் எனக் கருதப்படுபவரும், வேதநெறியும் சைவநெறியும் தழைத்தோங்கவும் பனைஏடுகளிற் செல்லுக்கிரையாகக்கிடந்த புராணங்கள், நிகண்டுகள் தமிழ்நூல்கள் முதலியவற்றைப் புத்தகரூபமாக்கித் தந்த தமிழ் வசனத் தந்தையும் தமிழரின் பெருவாழ்விற்கு முடிசூடா மன்னராகி விளங்கியவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார்.

அத்தகைய பெரியாரின் நாமத்தைக்கொண்டு தொடங்கிய சைவபரிபாலன சபையும் இந்துசாதனமும் அதன் ஆங்கிலப் பத்திரிகையும் (Hindu Organ) தமிழர்களதும் சைவர்களதும் அரும்பெரும் சொத்தாகும். அதனைப் பேணிக் காத்து அவற்றை வளர்ப்பதே சைவர்களின் பெரும் கடமையாகும். சைவர்களுக்கென சுத்ததமிழும் தனித்தன்மை வாய்ந்த சைவமும் நிலவும் யாழ்ப்பாணநாட்டிற்கு ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த சின்னமாகவும், அவற்றின்மூல

வளர்ச்சி 2-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஞூ கார்த்திகை மீ ச – உ வெள்ளி

## நாவலர்நெறி நடைமுறைவாரம்

கார்த்திகைத் திங்களில் வரும் மக நட்சத்திரத்தன்று நாவலர் பெருமானின் குருபூசை நிகழ்வது. இந் நாள் சைவ மக்களுக்கோர் நன்னாள், பொன்னாள். எந் நாளும் இந்நாட்டில் எண்ணத்துக்குரிய சைவ சீலனின் இலட்சியங்களை எடுத்துக் காட்டி மக்கள் சமய நெறியாளராக வாழ்வதற்குரிய பிரசாரம் நடாத்தி மக்களை எழுச்சி கொள்ளச் செய்வது பொருத்தமாகும். அத்தகைய பிரசாரவாரத்தைக் குருபூசைத் தினத்துடன் சார அமைத்தல் நன்று.

நாவலர் வாழ்ந்து காட்டிய நன்னெறியானது அன்னார் இயற்றிய, பரிசோதித்துப் பதிப்பித்த. நூல்களிலே நன்கு புலப்படுகின்றது. இந்நூல்கள் முன்னர் அச்சேற்றப்பட்டு ஆண்டுகள் நூற்றுக்கு மேலாகும், இவற்றுட் பல இப்பொழுது புத்தகசாலைகளிலே இல்லை; மறுபதிப்புக்கள் வெளிவரவேண்டிய நிலை இருக்கின்றது. ஆகவே நாவலர் வாரத்திலே சைவ மக்கள் இப்பணியைக் காலந் தாழ்த்தாது செய்வதற்கேற்ற நடைமுறையை ஆராய்வது சாலும்.

இவ் வாண்டுமுதல் நாவலர் வாரம் பொதுநிகழ்ச்சிகளில் ஒன்றாக விளங்குவதற்கு வழி காட்டியாக சைவ சபைகள் சங்கங்கள் தமிழ் மன்றங்கள் யாவும் ஏற்ற ஒழுங்குகளைச் செய்து எதிர்வரும் கார்த்திகையில் ஆரம்ப வாரத்தைத் தக்கவாறு அமைக்க வேண்டும்.

நாவலர் நாமத்தைப் பயன்படுத்துவோர் இந்த மகான் சைவத் தமிழ்க் காவலராய் ஆற்றிய அரிய தொண்டுகளின் பேறு மக்களிடையே செறியக்கூடிய வகையிற் செயற்றிட்டம் வகுத்து அப் பெரியாரின் பணி என்றும் நின்று நிலவி உலகுக்குச் சைவச் சால்பை விளங்க வைக்க முயற்சி செய்தல் முக்கியமான கடமை என உணர்தல் வேண்டும்.

கற்சிலையோ பொற் சிலையோ மட்டும் நாவலர் நற்றலைவரின் பெருந் தொண்டினை நீடூழி வாழ வைக்கமாட்டாது. அந்த உத்தமரின் பணியின் பயன் வாழ வேண்டும்; அதற்கு வழி வகுப்பதே இந்த நாவலர் நன்னெறி நடை வாரத்தின் நோக்கமாய் அமைதல் வேண்டும்.

x

## இராமநாத இலட்சியம் வாழ்க

இந்த வாரம் சனிக்கிழமை இலட்சிய வீரன் இராமநாதன் அவர்களின் நினைவு நாள். ஆண்டு தோறும் இந்நாளை மக்கள் தக்கமுறையிலே கொண்டாடி வருவது வழக்கம். அவ்வளவிலே சொல்லால் நன்றி சுவைக்கக் கூறுவது மட்டும் போதுமா? இலட்சிய புருடன் ஒருவனின் நினைவு என்றென்றும் நிலை நிற்கவேண்டுமேயானால் அன்னாரியற்றிய அரும் பணி பெரும் பயனளிக்க மக்கள் உழைத்தல் வேண்டும்.

இவ் வாண்டு பரமேசுவர மகா வித்தியாலயத் தருமகர்த்தா சபை இந்த இராமநாத இலட்சியத்தைத ஒரு புதிய, ஆனால் அதி பயன் படைக்கக் கூடிய திட்டம் மூலமாகச் செயற்படுத்த முயற்சி செய்துவருகின்றனரென்றறிந்து பெருமகிழ்ச்சியெய்துகின்றோம்.

இராமநாத வள்ளலின் தீர்க்க தரிசனத்திற்குச் சான்று அப் பெரியார் வகுத்த இருஷிகத் திட்டம் கிளிநொச்சிப் பகுதியிற் காட்டுக் காய்ச்சல் அதிவேக

## வாழி இரசிகமணி

'சொக்கன்'

[ஈழத்துத் தமிழிலக்கிய வானிலே விடிவெள்ளி போலத் தோன்றி இலக்கிய இரசனையிலே தோய்ந்து நின்று, பல்லாண்டுகளாகச் சுடர்விட்டு வருபவர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள். அன்னாரின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி இவ் வாழ்த்துப் பாடல்களை மிகுந்த மகிழ்வோடு வெளியிடுகின்றோம்.] ப—ர்.]

வாழி ரசிகமணி வாழியவன் தூயவுளம்
வாழி அவன்தந்த வண்டமிழ் நூல் — வாழியவே
அன்னோன் புகழும் அவன்ரசிக உள்ளமதும்
எந்நாளும் என்றேத்து வோம்.

தேனும் வண்டாய்த் திகழ்ந்துபல் நூல்களினைத்
தானுடி வாசித்துத் தான்சுவைத்த — வானோர்
சுவையைத் தெளிவாய்த் தொகுத்தே வழங்கி
அவைகளிக்க வைத்தான் அவன்.

ஈழத்திற் சென்றோர் இலக்கியபா ரம்பரியம்
ஆழத்தோ டுண்டென் றறைந்திட்டான் — ஈழத்துக்
கண்ணியத்தைக் காத்தான் கனிந்த
தமிழ்ப்பணியாற்
புண்ணியத்தைப் பெற்றான் புவி.

## சபை வளர்ச்சிக்கு

1 ம் பக்கத்து வளர்ச்சி

மாகச் சைவர்களின் கருத்துக்களைக் காலத்துக்குக் காலம் எடுத்து இயம்பும் ஸ்தாபனங்களாக 88 ஆண்டுகளுக்குமேல் அவை விளங்குகின்றன, சைவமக்களுக்கென ஒரு தனி ஸ்தாபனம் இருக்குமேயானால் அது யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையேயாகும் அதன் கட்டுக்கோப்பு, அதன் சீரியநிலை, அதன் நிர்வாகம், அதன் சொத்துக்கள் நிலை குலையாமலிருப்பதற்கு ஒருமித்த ஏகோபித்தகருத்து மிகமிக அவசியம், சபையின் அங்கத்தவர்களிடத்தில்கருத்து வேற்றுமை இருக்கலாம், அதன் நிர்வாகத்தைச் செயல்படுத்தும் வகையில் கருத்து வேறுபாடிருக்கலாம். ஆனல் ஆறுமுக நாவலரின பெயருககாக அவர் விட்டுச்சென்ற அறிவுச் சொத்தை (legacy)ப் பேணி வளர்ப்பதற்காக, பரிபாலனசபையின்சொத்துக்கள் சிதையாமல் பல்கிப் பெருகி வளர்ந்து தாயகதியைக் கொடுப்பதற்காக அசைக்க முடியாத ஒற்றுமை அங்கத்தவர்களிடத்து நிலவவேண்டும் தான் என்பதை மறந்து பொதுஸ்தாபனம் என்பதை உணர்ந்து மனதை விட்டுக்கொடுத்து ஒருமைப்பாட்டுடன் சபைசிறப்பாக இயங்கவேண்டும்.

"யான் செய்தேன் பிறர் செய்தார் என்னதியான் என்னும் இக் கோணை ஞான எரியால் வெதுப்பி", என்று சிவஞான சித்தியார் சொல்கிறது. "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பது திருநாவுக்கரசு சுவாமிகளின் அமுத வாக்கு, யான் எனது அற்ற இடமே திருவடி யாம்என்பது குமரகுருபரர் திருவாக்கு. ஆகையால் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்று பக

மாகப் பரவிய அக்காலத்திற் பல நூற்றுக் கணக்கான பரப்பு நிலத்தை அரசினரிடம் பெற்றும் காடு வெட்டி நாடாக்கி வயல் நிலம் அமைத்து நெல் விளைவுக்கு வித்திட்டமையே. இன்று அவ் வயற் பிரதேசம் வளத்தால் மிகவுயர்ந்து பயன் கொடுக்கின்து. அந்தக் கிளிநொச்சிக் கிராமத்தில் பரமேசுவர பாலர் பாடசாலைகள் பல தருமகர்த்தா சபையினராலே நிறுவப்பட இருக்கின்றன என்றும் இப்பொழுது அத்தகையதொரு கழகம் முன்னோடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது.

இந்தப் பரமேசுவர பாலர் பாடசாலைகள் ஏனைய சிறுவர் பாடசாலைகளிலும் பார்க்க மேலதிக சிறப்பு வாய்ந்தனவாக அமையும் என்றும் அறிகின்றோம். வள்ளல் இராமநாதன் இதயத்தில் எழுந்த கல்வித் திட்டம் எத்தகையதென்பதையும் பரமேசுவர மகா வித்தியாலயம், இராமநாதன் கல்லூரிகளின் மூல நோக்கப் பிரகடனத்திலிருந்து புரிந்துகொள்ளலாம். வேத சிவாகம முறைப்படி சைவத் தமிழ்க் கல்வியும் திருமுறைப் பயிற்சியும் பண்ணிசை வகுப்பும் இந்தப் பாலர் பாடசாலைகளிலே நிகழவுள்ளன. அறநிலையப் பெருமக்கள் தொண்டர்களின் இறைவனைப் பாராட்டுகின்றோம். இதுவன்றோ அரிய நினைவு நிகழ்ச்சி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணிசை மறுமலர்ச்சியை உருவாக்குவோம்

பாடசாலைகளில் பண்ணிசை ஆசிரியர்களை நியமிப்பதற்கு கொழும்பு விவேகானந்தசபை அகில இலங்கை இந்துமாமன்றம், சைவ பரிபாலன சபை ஆவன செய்ய வேண்டும்; சங்கீத ஆசிரியர்களும் பண்முறையில் கவனம் செலுத்தி முறையாக மாணவர்களுக்கும் பயிற்றினால் பண்ணிசை மறுமலர்ச்சியைப் பாடசாலைகளுக்கிடையே உருவாக்கலாம். கொழும்பு விவேகானந்தசபை இவ்வரண்டு முதற் கொண்டு திருமுறைப் போட்டியை நடாத்த முன்வந்தது பாராட்டுதற்குரியதாகும் என்று விவேகானந்த சபையினர் வவுனியா மாவட்டத்தில் வவுனியா மகாவித்தியாலயத்தில் நடாத்திய திருமுறைப் போட்டிக்கு நடு நிலைமை வகித்த பண்ணிசைமணி எஸ். கே. சிவபாலன் தமதுரையில் கூறினார்.

வத்திதை கூறுகிறபடி எம் பெருமான் என்னைக் கொண்டு ஒரு நல்ல செயலைச் செய்விப்பதற்கு என்னை ஒரு கருவியாகக் கொண்டுள்ளார் என்ற உணர்வில் இறைபணியாக சிவ தொண்டாக அங்கத்தவர்கள் கருதிதொண்டாற்ற வேண்டும்.

"ஆர்குற்றினுலும் அரிசியாகட்டும்' என்ற பழமொழியின் உண்மையையும் சிந்திக்க வேண்டும்.

சைவ பரிபாலன சபையின் அபிவிருத்தியின் பொருட்டு கீழே சொல்லப்படும் வழிகளில் பணத்தைச் செலவு செய்யலாம். சபையின் சொத்து சிவ சொத்து என்ற உணர்வு அங்கத்தவர்களிடத்தில் குடிகொண்டிருந்தால் அதனால் வரும் விளைவு மிகவும் உண்மை உடைத்து.

இந்துசாதனம் பத்திரிகை சைவமக்கள் கரங்களில் தவழச் செய்யவேண்டும். ஒரு கிராமத்தில் குறைந்தது 20 இந்துசாதன ஆதரவாளர்களாவது இருக்கவேண்டும் பாடசாலைகள் கல்லூரிகள் தோறும் இப்பத்திரிகை படிக்கப்பட வேண்டும், வெளிநாடுகளில் உள்ள தமிழர் சைவர் இந்த இதழைப் படிக்க முன்வர வேண்டும்.

ஆறுமுகநாவலர் நூல்களை பரப்பலாம. பாடல் பெற்ற தலங்களின் திருப்பணிகளுக்கு உதவலாம். நல்ல திருப்பணிகள் பல உண்டு. இவைகளைச் செய்ய விழிமின்! எழுமின்!

ஆறுமுக நாவலர் நினைவுப்

## பேச்சுப் போட்டி

கொழும்பு விவேகானந்த சபையின ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பேச்சுப் போட்டி இவ் வருடம் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது. போட்டி மூன்று பிரிவுகளாக நடாத்தப்பெற்றது. வடமாகாணத்திலிருந்து பல பாடசாலைகள் பங்கு பற்றின. போட்டி மேலாளராகக் கடமையாற்றிய திரு அருள் தியாகராசா அவர்கள் தற்போது மாணவர்களிடையே சமய விழிப்புணர்ச்சி தோன்றியிருக்கின்றது. விவேகானந்த சபையின் இப்பெருபணிக்கு எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கூறினர், போட்டி நடுவர்களாக திரு. அருள் தியாகராசா திரு. ச. விநாயகமூர்த்தி திரு அ தற்பரானந்தன், திரு. எஸ் கே, சிவபாலன் ஆகியோர் பணியாற்றினர், பரீட்சைப் பொறுப்பாளர் செ. சோதிப் பெருமாள் நன்றியுரை நவின்றனர்.

# தொண்டு செயத் துணிந்து நிற்கும் இளைஞர்கள்

## அவர்தம் அரிய பணியின் தொகுப்பு

இன்றைய உலகிற் பிறக்கும ஒவ்வொருவனும் தொண்டுகள் செய்யவேண்டும் தொண்டுகளில் சைவத் தொண்டும் ஒன்ருகும் சைவத தொண்டிற் குறிப்பாக வருங்காலச் சந்ததியினரைப் பற்றிப் பார்ப்போம்.

சைவத் தொண்டு பல வகைப்படும். திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூப்பறித்தல், மாலைதொடுத்தல் போன்றன இறைவனுக்கு நாம் செய்யும் தொண்டுகளிற் சிலவாகும். இளைஞர்கள் சைவத் தொண்டில் ஈடுபடுவதை நாம் பல இடங்களில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாகக் கோவில்களில் இவ்வாறு இளைஞர்கள ஈடுபடுவதை அவதானிக்கலாம்.

ஆலயங்களிலே இளைஞர்கள் இறைவனுககுப் பற்பல தொண்டுகள் செய்கின்ருர்கள். கோவில் விழாக்காலங்களிற் குறிப்பாக இளைஞர்கள் முன்னிற்பது அவதானிக்கக் கூடியதொன்ருகும். இறைவன் எழுந்தருளும் திருவுருவத்தைத் தாங்கிக் கொண்டு செல்லுதல் தேர் இழுத்தல் முதலிய திருத் தொண்டுகளை இளைஞர்களே செய்து வருகின்றனர் என்பது கண்கூடு. திருவிழாக்காலங்களில் இறைவனின் அடியார்களுக்குத் தாகசாந்தி செய்வதற்காக வீடு, வீடாக நிதி [illegible]ரட்டுவதும், பந்தல்களை [illegible]மைத்து அடியார்களு[illegible] தாகசாந்தி செய்வதும் இளைஞர்களே என்பது ம[illegible]க்கமுடியாத உண்மை!

இன்று இளை[illegible]ர்கள் இயக்கங்களையும் ஆரம்[illegible]க்கின்ருர்கள். இந்துசமய மறுமலர்ச்சி இயக்கம், இந்துமாமன்றம் போன்ற இயக்கங்களைக் குறிப்பாக இளைஞர்களே உருவாக்கி அவற்றின் மூலம் இறைவனுக்குத் தொண்டு செய்கின்றனர். மறைந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள இளைஞராக இருந்தபோது (22 வயதில்) வண்ணார்பண்ணைச் சிவன் கோவலிற பிரசங்கம் செய்து அப்போது தாழ்ந்திருந்த சைவ சமயததினை உயர்த்தினர், இவர் இளைஞராக இருந்த போதே இவவாறு செய்திருக்கின்ருர் என்பதை நாமுணர்ந்து கொள்ளலாம.

இது மட்டுமல்ல; இளைஞர்கள் இன்று தேவாரப் பதிகங்களை அச்சிட்டு இலவசமாகவும், மிகக்குறைந்த விலையிலும் வெளியிடுகின்ருர்கள. சிரமதானமூலம் அதாவது தமது சிரமத்தைத் தானம் செய்து கோவில் வீதியைச் சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருக்கின்ருர்கள். கோவிலின் சுற்றுப்புறங்களில் உள்ள புல், பூண்டுபோன்றவற்றை அகற்றியுமகுப்பை கூளங்களைநீக்கியும் சுத்தஞ் செய்கின்ருர்கள்.

கோவிலைச் சுத்தம் சேய்தது தவிர கோவிலின் உட்புறங்களைக் கூட்டி எந்நேரமும் சுத்தமாக வைத்திருக்கின்ருர்கள். அது மட்டுமன்றிக் கோவிற் திருவிழாக் காலங்களில் ஒழுங்கினை நிலைநாட்டுபவர்களும் நிலைநாட்ட உதவுபவர்களும் இளைஞர்களே என்பது தக்க வெளிப்படை

முன்பு கூறியருந்தபடி இந்துசமய இயக்கங்களிற் பல சைவப் பெரியார்களைப் பேசுவதற்காக அழைத்துச் சைவம்வளர உதவுகின்ருர்கள் திருவெம்பாவைக் காலத்தில் அல்லது மார்கழி மாதததில் அதிகாலை நேரத்தில் வீதி பஜனை செய்வதற்கும் இளைஞர்கள் உதவுகின்ருர்கள் என்பதைவிட முன்னின்று உழைக்கின்ருர்கள் என்பதே சாலப் பொருந்தும்.

சைவத்தொண்டு புரிதற்கு இன்று இளைஞர்கள் பல இயக்கங்களின மூலமும் மேற்கூறியவற்றைச் செயற்படுத்து கின்ருர்கள். இதற்காகப் பத்திரிகைகள் மூலம செய்திகளை விடுத்தும, பத்திரிகைகளைத தாமே அச்சிட்டு வெளியிட்டும் பலவாறு உதவுகின்ருர்கள்.

ஆலயங்களில் இறைவனுக்குப் பூமாலை கட்டிக கொடுக்கின்றனா இளைஞா பலர் சைவ சமயம முன்னைய காலங்களில் தாழ்ந்திருந்தது போலல்லாமல் இன்று சைவ சமயத்திற்கும் சைவ மக்களுக்கும் புத்துயிர் கொடுத்துச் சைவ சமயததை வளரச் செய்பவர்கள் இளைஞர்களே இவர்கள் எப்போதும் சைவசமயததைக் கட்டிக் காக்கும் நிலையில் இருக்கின்ருர்கள். தொண்டுகளில் அதுவும் சைவத தொண்டுகளில் முன்னின்று உழைப்பவர்கள இளைஞர்களே என்பது யாவரும் அறிந்ததாகும

இவவாறுபபல சேவைகளையும இளைஞர்கள் சைவசமயத்திற்காகச் செய்யத் தயங்கமாட்டார்கள். சைவசமயம தாழாமல் எப்போதும் மேலோங்க இளைஞர்கள் என்றுமே உதவி புரியத் தயங்க மாட்டார்கள்.

(யாழ் மத்திய கல்லூரி இந்து மாமன்ற இதழாகிய "மத்தியவாணி"யிலிருந்து இளைஞர் சேவை ஆர்வத்தைப் பாராட்டுமுகமாக இந்து மறு பிரசுரமாக வெளியிடுகின்ருேம்.)

## இலங்கை இசைப் பேரவை

இலங்கை இசைப் பேரவை என்ற ஓர் அமைப்பின் அங்குரார்ப்பண வைபவம் திரு. ஆர். சி. மன்மதராஜன் தலைமையில் நல்லூர் நாவலர் மணிமண்டபததில் 14-11-76 ஞாயிறு நடைபெற்றது. இப் பேரவையின் ஆட்சிக்குழுவின் போஷகராக திரு. ஆர். சி. மன்மதராயனும் தலைவராக இசையரசு பி. சந்திரசேகரமும், செயலாளராக திரு S. K. சிவபாலனும் பொருளாளராக சங்கீதபூஷணம் பூமணி இராசரததினமும் தெரிவாகினர். மற்றும் ஒன்பது பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## வடமாநிலக் கல்வியலுவலகத்தில் யோகாசனப் பயிற்சியும் விரிவுரையும்

யோகாசன மேதை சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகி (நல்லை ஆதீனம்) அவர்களின் விரிவுரையும் யோகாசனம் பற்றிய செய் முறைக் காட்சியும் எதிரே வரும புதவெகிழமை 24-11-76 பிற்பகல் வடமாநிலக் கல்வியலுவலகத்தில் கல்வியதிபதி திரு. ஏ. எம். பஜீத் தலைமையில் நடைபெற விருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தங்கியிருந்து யோகக் கலை வளர்ச்சிப் பிரசாரங்களைச் செய்து வந்த சுவாமியவர்கள் இப்போது நல்லை ஆதீனத்தில் தங்கியிருந்து இக் கலை பற்றிப் போதனைப் பணி புரிந்து வருகிருர்.




[illegible] யோகாசனங்களில் [illegible] ஒன்றை நோக்குக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஐயாத்துரை தியாகராசா, ஏழாலை

இல( ஈடு / 413[illegible] எதிராக வாதி

1 வீரகதி தில்லையம் லம்

8, பெண் மனோன்மணி ஏழாலை வடக்கு

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு. 14125 இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழேவிபரிக்கப்படும் ஆதனம் 1976-ம் ஆண்டு மார்கழி மாதம 8-ந் திகதி (8-12-76) புதன்கிழமை காலை 9 30 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதலும் வட்டியுமாக 2563-75 இன்னும் 1500/- ரூபாவிற்கு 1973-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5-ந் திகதியிலிருந்து 1974-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25-ந் திகதி வரைக்கும் நூற்றுக்கு பத்துவீத வட்டியும் கூட்டிக் கூடிய தொகைக்கு 5—10—1974 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு 417/27½ சதமும் (ஏற்பட்ட செலவு 240/ 0 நடைபெறவேண்டிய செலவு 95/75 சமயாசமடச் செலவு 80-92½) இதில் 1-10-1974ல் கொடுத்த 1000 ரூபாவும் 10-1-76-ல் கொடுத்த 500/- ரூபாவும்போக மிகுதி,

### ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்ட வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை "மாதிரையும் மறுபிரிவுகளும்" நில. பா 6ல் மேற்குப்பக்கமாகச் சீதனம் கொடுக்கப்பட்ட நிலப்பரப்பு 3 போக மிகுதி கிழக்குப் பக்கமாய் நில. பர. 3. இந்த நிலப்பரப்பு 3க்கும் எல்லை கிழக்கு யோகையர் ஐயாத்துரையினுதனம், வடக்கு தெரு, மேற்கு புஸ்பராசா பெண் இராசமலரு குரியவாதனம், தெற்கு எதிரகளுக்குரியவாதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும். மேற்கெல்லையிலிருக்கும்கிணற்றிலிதற்குரிய பங்கும்,

"அகில் அகம்" தா. க. பொன்னுத்துரை

28/1 யாழ் ரேட் கோமிஷனரும் விலைமதிப்பாளரும்

யாழ்ப்பாணம் 72-15.10 29-9-76

## ஆறுகுளமில்லா ஊருக்கு— அழகுபாழ்! பாழே.



பத்தர்: "யாழ்ப்பாணக் குடாநாட்டில தண்ணீர்ப் பற்றுக்குறைமைய ஓரளவு தீர்க்க உதவியாக நன்நீர் சேமித்தலைப் பெருக்குவதற்குரிய நடவடிக்கைகளை யாழ் அரசாங்க அதிபர் எடுத்திருக்கிறாரண்ணே! இதுசம்பந்தமாக ஒருகுழு அரசாங்க அதிபரினுல் நியமிக்கப்பட்டிருந்தது. அவர்களது ஆலோசனை செயற்படப் போகுது என்றுசொல்லுங்களேன்!

சித்தர்: "ஆறில்லா ஊருக் கழகு பாழ்" என்றனர் ஆனறோ. இங்கே ஊருக்கு ஆறு குளங்களாவது இல்லாத கிராமம இல்லையென்றுகூறலாம்; இந்தக குளங்களின் இன்றைய நிலை என்ன? இவற்றை அன்னைதரும் அமுதத்தைப் பேணுவதற்கு வழி செய்தோமா? 'ஆறு'-'குளம்' இல்லா ஊருக்கு அழகு பாழ்' என்று, அதாவது ஊருக்கு ஐந்தாறு குளமாவது இருக்கவேண்டுமெனப் பாடலைத் திருத்த வேண்டியுள்ளது. ஆதலால், நாட்டுக்கு வாழ்வு வளமுந் தரும் குளங்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவது அரசின் கடமை! எடுக்கஉள்ளது நல்ல காரியம்! ஊருக்கு அழகைத்தேட அனைவரும் கிளம்பவேண்டும்!

"நாயன்மார் - நாதன்!"

## ஞான பீடம்...

1-ம் பக்கத்து வளர்ச்சி

கண்டதேவநாயனாரின் குருபூஜை விழாவினைத் திருவருமை ஆதீனம் 26-வது குருமகாசந்நிதானம் அவர்கள் ஐப்பசித்திங்கள் 8-ம் நாள் ஸ்ரீ மெய்கண்டதேவர் திருஅவதாரத்தலமாகுய பெண்ணாகடம் களப்பாளர் மேட்டில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மெய்கண்டதேவர் கோயிலிலும் ஸ்ரீ மெய்கண்டாருக்கு சிவஞானம் கைவரப்பெற்றதும் முத்திபேறெய்தியதுமான திருவெண்ணெய் நல்லூர் ஸ்ரீ மெய்கண்டார் கோயிலிலும். ஆதீன ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ மெய்கண்டாருக்கும் விசேஷ அலங்கார ஆராதனைகளை சொற்பொழிவுகளுடன் நடத்தி வைத்துள்ளார்கள், (ந. நி.)

## லண்டனுக்கு பண்டத்தரிப்புச் சேலைகள்

யா: பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தில் தயாரிக்கப்பட்ட கைத் தறித் துணிகளாலான பெண்கள் அணியும் முழுக கை அரைக் கைச் சட்டைகள் லண்டனுக்கு ஏற்றுமதியாக விருக்கின்றன. பிரித்தானிய வர்த்தகத் தாபனங்கள் இரண்டுடன் அண்மையில் செய்து கொண்ட வர்த்தகத் தொடர்பின் முதலாவது பகுதியே இந்த ஏற்றுமதியாகும். இச்சங்கம நெசவு செய்யும துணிகளின் மாதிரி இனங்கள் ஒட்டப்பெற்ற புத்தகமும் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன

## அஞ்சலிக் கூட்டம்

முத்தமிழ் விரகர் திரு. செ. தனபாலசிங்கன் அவர்களின் பிரிவு குறித்து அஞ்சலிக்கூட்டம் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் 21-11-76 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில திரு. மு. பசுபதி தலைமையிலெநிசழும. கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள், திரு. ச. விநாயகமூர்த்தி சைவப் புலவர் க. சி. குலரததினம், வித்துவான் க. சொக்கலிங்கம் பண்டிதர் நீ. சி முருகேசு ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

மறப்பது வாய்கின்ற மாயநல் நாடன்
பிறப்பினை நீங்கிய பேரரு ளாளன்
சிறப்புடை யான், திரு மங்கையும் தானும்
உறக்கமின் போகத் துறங்கிடும் தானே,

The possessor of the kingdom of bewildering Maya, the birthless magnificent Lord of immence Grace — He and His Gracious Consort sleep entrenched in the hearts of devotees enjoying silent calm.

Hindu Organ

Friday, November 19, 1976

## Water in Plenty

Continuous showers during the last six weeks and the prospect of further down-pour must certainly have raised sufficient hopes in the minds of cultivators for the realisation of a rich harvest after repeated failure in the three years that preceded. However, the feeling of satisfaction must be regarded as subject to adverse circumstances in the form of floods. Such situations had arisen in the past and devastation by deluge had heavily ruined cultivation. Lessons of these debacles do not seem to have been learnt by the Administration, much less by the people. The simple question that has to be answered is whether sufficient precaution has been taken to prevent floods. In other words, have steps been initiated to conserve rain water for fruitful use?

The occurrence of minor floods in the rural areas of the Northern Peninsula has become a feature every year as the drainage system of the past has been completely dislocated by the indiscriminate construction of buildings without consideration for the outlet of water in excess Culverts have been abandoned, drains by the roadside have been destroyed and regular outlets have been blocked. The result is the formation of temporary pools of water in almost every compound. Apart from the adverse effect on the sanitation of the affected areas, the damage that is caused in terms of economy makes the prospect of cultivators gloomy.

It must now be acknowledged that the present situation is precarious. Immediate action has to be taken by the Authorities to conserve the boon of seasonal rains by effecting necessary measures to pool these resources with a view to meeting the demands in the event of a drought and removing the causes for floods.

## KAVIMANI'S CONTRIBUTION

"I saw the Temple
and climbed its tower
Nowhere my Lore;
my search was vain
He stays in the heart
Of this be sure.
If found therein
You will perceive Him
in temple as well".

"The guard at the gate
expert in hunt;
Shepherd of the flock
loving friend.
Faithful to the hand
that fed him.
Is there a true companion
To equal the dog?"

"Laden armful with sweet
fruit
And guided by love's
warm glow,
You came to my humble
dwelling,
O noble One, and melted my heart.
Munificent giver of
Vyasa's Feast
Akin to nectar! Teacher of Vedanta!
Doer of good deeds,
Master,
Prosper on this green
water-bound sward
By Grace of the discus.
wielding Lord.
You're strategist of strategists and
Devotee of devotees and
Minister esteemed of
ministers,
Rajagopala! Child of
Grace!
Prevail and be fulfilled
on earth."

## Who is An Ideal Devotee?

The ideal Bhakta, distinguished by his selfless unswerving faith in God and attitude of abject surrender to Him, will not seek anything from God. Being the omniscient the Lord knows the difficulties grievances, desires and ambitions of every individual and no one need tell Him about them. Omnipotent that He is, the Almighty can give him anything and may, out of His mercy, shower limitless benefits, if He so chooses. To make any specific request therefore will. besides being redundant, mean restricting the Lord's hands, for He might be willing to give him more than what he asks for. Further, odd though it may appear, one does not know what is really good for him. So, the devotee for whom Bhakti is not a commercial proposition but a way of life will have no value for anything except the blissful experience of chanting hymns in praise of the Supreme Being and uttering His names With his thoughts, deeds and words revolving round Him all the time, he will not be bothered about his material needs. Kuchela was a shining example of such a devotee, and he agreed to his wife's suggestion that he could meet his friend Krishna, not because he wanted to become affluent but because it would give him an opportunity to meet Him

Sri Krishnapremi, in his discourse at the Aswamedha Mandaram, West Mambalam pointed out how Kuchela at his, meeting with Sri Krishna did not seek anything from the Lord and yet was blessed with enormous riches. What was more significant was that in spite of his new found prosperity. Kuchela retained his Vairagya and led a life of detachment with his mind, body and soul dedicated to Sri Krishna.

"Madras Hindu"

## Stories from Kanda - Purana Their Esoteric Significance

கந்தபுராணக் கதைகளும் அவைகள் உணர்த்தும் உண்மை நூற் கருத்தும்

V. SUBRAMANIAM
Saiva-Pulavar

### Daksha

It was Dakshas Sacrifice that was the cause of Devas, imprisonment and their release by God Subramania after He had destroyed the Asuras.

விண்ணவராயினோர்க்கும்
மேதகு முனிவர் யாருக்கும்
எண்ணமில் சூரன் தன்னால்
எய்திய தீமை யெல்லாம்
நண்ணலர் புர மூன் றட்ட
நாதனையன்றித் தங்கள்
பண்ணிய மகத்திற்புக்க
பாவத்தால் விளைந்த
தென்றான்,

Brahma, the Creator, had a son, name by Daksha who wanted to know who the Supreme Being is and whom he wished to worship. So he approached hi father (Brahma) and said, "O father, who is the Supreme Being?"

Brahma replied, 'Sivaperuman is the Supreme Being and no one else".

Then Daksha did severe penance to win the favour of Lord Shiva. Shiva appeared before him and asked him what boons he wanted. Dhaksha, though he was favoured by the Supreme God did not like to obtain salvation but asked for worldly pleasures which the God granted and said, "If you lead a virtuous life, they will last you long". Then He disappeared. By the boons be got from Shiva, Daksha exercised his authority over Tirumal திருமால் etc, and Rishis and ruled oppressively over them with a high hand.

While thus living he begot several sons and sent them to Shiva to obtain boons. So they were performing penance. At the time Sage Naradar approached them and advised them to obtain salvation from Shiva. They did so and all attained salvation. This was not disliked by Daksha.

After some time Daksha begot several daughters whom he got married to the Moon and was greatly pleased at first, but later on he had to eat humble pie. As desired by him, Uma became his dauhter. Lord Shiva in the form of a bridegroom married her and soon vanished with her. This act of Lord Shiva annoyed Daksha very much. He became insolent and thought that he was superior to all He went to Mt. Kailaya to see Lord Shiva but guardian angels prevented him from seeing the Lord Shiva He then led an inpious life, and attempted to perfom a yaga (Sacrifice with Tirumal as the Almighty God instead of Lord Shiva.

Dadesi Rishi and others who came to know this advised Daksha that performing sacrifice leaving out Shiva was not good but Daksha turned a deaf ear to these, He began to have his sacrfice performed by Tirumal and other Gods.

Umadevi took pity on Daksha (Her father) and gave him good counsel but he did not heed it and she departed. Lord Shiva then created God Veerabadra who destroyed his sacrifice, punished Tirumal and other Gods who partook in the sacrifice and listened to Daksha's contemptous words. Daksha too was put to death.

Afterwards Shiva took pity on Daksha and restored him to life and showed his Grace to Tirumal and others. Daksha reappeared. his head being that of a goat and his pride disappeared.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday November 19, 1976.

Editor-in-Chief R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org